PRN
SRI NAMMALWAR
ஸ்ரீ நம்மாழ்வார் நவதிருப்பதி

SHRI BALASUBIKSHAM
RAMASUBRAMANIAN

ஸ்ரீபராங்குசாஷ்டகம்

த்ரைவித்யவ்ருத்தஜநமூர்த்தவிபூஷணம் யத் ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம்,
யத் வா சரண்யமசரண்யஜநஸ்ய புண்யம் தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரியுக்மம் :

யாதொரு நம்மாழ்வார் திருவடியிணையானது பரம வைதிகர்களுடைய முடிக்கு அலங்காரமாயிருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே ஸர்வ காலமும் ஸாத்விகர்களுக்கு ஸகலைச்வர்யமுமாக இருக்கின்றதோ, யாதொரு திருவடியிணையே புகலொன்றில்லாதவர்களுக்குத் தஞ்சமா யிருக்கின்றதோ, அப்படிப்பட்ட பரமபாவனமான நம்மாழ்வாரது திருவடியிணையை ஆச்ரயிக்கக் கடவோம்.

பக்திப்ரபாவபவதத்புதபாவபந்த ஸந்துக்ஷிதப்ரணயஸாரரஸௌகபூர்ண:,
வேதார்த்தரத்நநிதிரச்யுததிவ்யதாம ஜீயாத் பராங்குசபயோதிரஸீமபூமா.

பக்தியின் கனத்தாலுண்டாகி ஆச்சரியமான அபிப்ராய விசேஷங் களினால் வளர்க்கப்பட்ட சிறந்த ப்ரணயமாகிற தீர்த்த ப்ரவாஹத்தாலே [நவரஸஸமூகத்தாலே] நிறைந்ததாயும், வேதப்பொருளாகிற நவரத்னங்களுக்கு நிதியாயும், எம்பெருமானுக்கு திவ்யமான ஸ்தானமாயும் அளவில்லாத பெருமையையுடையதாயுமிருக்கிற நம்மாழ்வாராகிற கடல் நெடுநாள் வாழ வேணும்.

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்த்வமிவோதிதம்.
ஸஹஸ்ரசாகாம் யோத்ராக்ஷீத் த்ராமிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம்.

யாவரொருமுனிவர் ஆயிரம் பாசுரங்களையுடையதான த்ராவிடப்ரஹ்ம ஸம்ஹிதையை ஸாக்ஷாத் கரித்தாரோ, க்ருஷ்ணபக்தியே வடிவெடுத்து அவ தரித்ததென்னலாம்படியான அந்த சடகோப முனிவரை ஸேவிக்கிறோம்.

யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம் நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர:,
யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா: தஸ்மை நமோ வகுலபூஷணபாஸ்கராய.

ஸூர்யனுடைய ஆயிரம் கிரணங்கள் வெளியிருளைப் போக்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய ஆயிரம் பாசுரங்கள் ஸகல சேதநர்களுடையவும் அகவிருளைத் தொலைக்கின்றவோ, ஸூர்யனிடத்தில் நாராயணன் சங்கு சக்கரங்களோடு கூடி விளக்குவது போல அப்பெருமான் யாவரொரு ஆழ்வாரிடத்தில் அவ்விதமாகவே உறைகின்றானோ, வேதப்ரதிபாத்யமான ஸூர்ய மண்டலத்தை அந்தணர்கள் வணங்குவதுபோல யாவரொரு ஆழ்வாருடைய திவ்ய ஸ்தலம் செவிப்பட்டவுடனே பரம பாகவதர்கள் கையெடுத்துக் கும்பிடுகிறார்களோ அப்படிப்பட்ட நம்மாழ்வாராகிற ஸூர்யனுக்கு வணக்கமாகுக.

பத்யுச் ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்தஸார்வஜ்ஞ்யஸம்பதம்,
ப்ரபந்ந ஜநகூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம்.

திருமால் திருவருளால் ஸர்வஜ்ஞத்வமாகிற ஸம்பத்தைப் பெற்றவரும் ப்ரபந்ந ஜனங்களுக்குத் தலைவருமான நம்மாழ்வாரைத் தஞ்சமாகப் பற்றுகிறேன்.

சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்திதூஷகம்,
அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீமூலஸம்ச்ரயம்.

குடிலபுத்திகளுடைய துர்ப்புத்தியைத் தொலைப்பவரும் அறிவில்லாதவர்களுக்கு நல்லறிவை நல்குமவரும் திருப்புளியாழ்வாரடியிலே வீற்றிருப்பவருமான நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

வகுளாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம்,
யச் ச்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிடபாஷயா.

யாவரொரு ஆழ்வார் வேதத்தின் உத்தரகாண்டமாகிய உபநிஷத்தைத் தமிழ் மொழியினால் வெளியிட்டருளினரோ, உலகுக்கெல்லாம் அலங்காரபூதரான அந்த நம்மாழ்வாரை வணங்குகிறேன்.

நமஜ்ஜநஸ்ய சித்தபித்திபக்திசித்ரதூலிகா
பவாஹிவீர்யபஞ்ஜநே நரேந்த்ரமந்த்ரயந்த்ரணா,
ப்ரபந்நலோககைரவப்ரஸந்நசாருசந்த்ரிகா
சடாரிஹஸ்தமுத்ரிகா ஹடாத் துநோது மே தம:.

தம்மை வணங்குமவர்களுடைய ஹ்ருதயமாகிற சுவரிலே பக்தியாகிற சித்திரத்தை யெழுதுங் கருவியாயும், ஸம்சாரமாகிற ஸர்பத்தினுடைய வீரியத்தைத் தணிக்கும் விஷயத்தில் விஷவைத்யனுடைய மந்த்ரப்ரயோகச் சிமிழ்கை போன்றதாயும், ப்ரபந்ந ஜனங்களாகிற ஆம்பல் மலர்களை விகஸிப்பிக்கவல்ல அழகிய நிலாபோன்றதாயுமிருக்கிற நம்மாழ்வாருடைய திருக்கைத்தலமுத்திரையானது என்னுடைய அகவிருளை எப்படியாவது தொலைத்தருளவேணும்.

மாறன் பராங்கதிதந்தடியேனை மருட்பிறவி
மாறன்பரானகுழாத்துள்வைப்பான் தொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகம் செய்யாமல் என்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்க வென்னெஞ்சினும் வாக்கினுமே.

சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்குளே யின்புளிமேவும்-நம்தங்
கருவரங்கங்கைத்து அழலும் காவிரியினூடே
திருவரங்கத்தே வளரும் தேன்.

SHRI BALASUBIKSHAM

RAMA SUBRAMANIAN.

ஸ்ரீ பால சுபிக்ஷம்
இராமசுப்பிரமணியன்